இந்திய உச்சநீதிமன்றம்

2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11–ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. தனஞ்சய ஓய் சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா

குற்றவியல் மேல்முறையீட்டு எண், 121/ 2021

கோகன் (எ) கோகன் விஸ்வாஸ் – மேல்முறையீட்டாளர்

– எதிர் –

சத்தீஸ்கர் மாநில அரசு – எதிர் மேல்முறையீட்டாளர்

தண்டனைச் சட்டம், 1860, பிரிவு 302 – பிரிவு 302 ன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு குற்றத்தீர்ப்பு – அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், சம்பவ நாளன்று மாலையில், பாதிக்கப்பட்டவர்/மரணமுற்றவர் தனது அண்டை வீட்டாரின் வீட்டில் இருந்தபோது, மேல்முறையீட்டாளர் அவரிடம் பணம் குறித்து பேசி கொண்டிருந்தார், – அதன் பிறகு, மேல்முறையீட்டாளர் அவரிடம் சண்டையிட ஆரம்பித்து, அவரை கீழே தள்ளி, அவரது வயிற்றில் ஏறி நின்று நசுக்கினார் – மறுநாள் மாலையில், மரணமுற்றவருக்கு அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்பட்டதால், அவர் சிகிச்சைக்காக மருத்தவமனையில் அனுமதிக்கபட்டார், அதே இரவு அவர் வேறு ஒரு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார் – அடுத்த இரண்டு நாட்களில் அவர் சிறுகுடலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக செப்டிசிமியா ஏற்பட்டு மரணமுற்றார் – கீழமை நீதிமன்றம் பிரிவு 302–ன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு தண்டனை தீர்ப்பளித்தது – பிரிவு 304(I)–இன் கீழ் தண்டனையை மாற்றி அமைக்க முடியுமா என்ற கேள்வி

மேல்முறையீட்டுக்கு உட்பட்டது – முடிவு : பதிவாவணத்திலுள்ள சான்றாவணத்திலிருந்தும், அரசுத் தரப்பு வழக்குப்படியும், மரணமுற்றவருக்கு சாதாரணமாக மரணத்தை விளைவிப்பதற்கு போதுமானதாகயுள்ள மரணமுற்றவருக்கு மரணத்தை ஏற்படுத்தும் அல்லது உடல் காயத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அத்தகைய செயல் மேல்முறையீட்டாளரால்– குற்றஞ்சாட்டப்பட்டவரால் செய்யப்பட்டது என்று கூற முடியாது – மேல்முறையீட்டாளரின் தரப்பில் முன்திட்டமிடுதல் ஏதேனும் உள்ளனவா என்பதற்கான சான்று ஏதுமில்லை – பணம் தொடர்பாக தீடீர் சண்டை ஏற்பட்டு, கட்டுப்படுத்தமுடியாத கடுஞ்கோபத்தினால், மேல்முறையீட்டாளர் முரணமுற்றவரை தள்ளி, அவரது வயிற்றின் ஏறி நின்றார் – எனவே, வழக்கு பிரிவு 300 –இன் விதிவிலக்கு 4–க்கு உட்பட்டது – பிரிவு 300–இன் விதிவிலக்கு 4–இன் விளக்கப்படி, எந்த தரப்பினர் ஆத்திரமடைந்தனர் அல்லது முதலில் தாக்கினர் என்பது முக்கியத்துவமற்றது – பிரிவு 302–இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளரை குற்றவாளி என தீர்மானித்ததில் கீழமை நீதிமன்றங்கள் முக்கிய பிழை புரிந்துள்ளது – மேல்முறையீட்டாளர் பிரிவு 304(1) –ன் கீழான குற்றத்திற்காக குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டார்.

நீதிமன்றத்தால், மேல்முறையீட்டின் ஒரு பகுதி அனுமதிக்கப்படுகிறது,

முடிவு –1. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 300, இரண்டு பகுதிகளைக் கொண்டது, முதல் பகுதியில் எப்போது மரணம் விளைவிக்கும் குற்றம் கொலையாக கருதப்படும் மற்றும் இரண்டாம் பகுதி விதிவிலக்கில் எப்போது மரணம் விளைவிக்கும் குற்றம் கொலையாக கருதமுடியாது எனவும் கூறப்பட்டுள்ளது, எங்கள் நோக்கத்தில் இந்த வழக்கிற்கு தொடர்புடைய பகுதியானது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300–ல் கூறு 4 மற்றும் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300–ல் விதிவிலக்கு 4–ம் ஆகும், இந்கிய தண்டனை

சட்டம் பிரிவு 300–ல் கூறு 4–இல் இருந்து பிரிவு 300 வரை குறிப்பிடப்பட்டுள்ளபடி , அந்தச் செய்கையைச் செய்கின்றவர், அது, பெரும்பாலும் உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவே செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ மேற்சொன்னவாறான அத்தகைய காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமுமில்லாமல் அத்தகைய செய்கையைச் செய்வாரானால், மரணத்தை விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகும். எனினும், குற்றவாளி தகாத முறையில் தமக்கு அனுகூலம் தேடிக் கொள்ளும் வகையில் இல்லாமலோ, அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்து கொள்ளாமலோ, திடீர்த் தகராறில் உண்டான உணர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட திடீர்ச் சண்டையில் மரணம் விளைவிக்கும் குற்றம் முன் ஆலோசனையின்றிச் செய்யப்பட்டால், அது கொலைக் குற்றமாகாது. (பத்தி 7)

2. தற்போதய வழக்கின் பொருண்மைக்கு வருவோம், அரசு தரப்பு வழக்கின் படி கூட, 8.8.2006 அன்று மாலை சுமார் 6.30 மணி அளவில் மரணமுற்றவர் தனது அண்டை வீட்டில் இருந்தபோது, அதே சமயத்தில் , குற்றஞ்சாட்ட ப்பட்டவர் பணம் குறித்து மரணமுற்றவருடன் உரையாடிக்கொண்டிருந்தார். பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவர் அவருடன் சண்டையிட்டார். அரசு தரப்பு வழக்கின் படி, குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரை கீழே தள்ளி மற்றும் அவரின் வயிற்றின் மீதேறி நின்றதன் விளைவாக உள் காயம் ஏற்பட்டது. இந்நிலையில் , மறுநாள் வரைக்கும் அதாவது 9.8.2006 அன்று வரை மரணமுற்றவரை மருத்துவமனைக்கு கூட அழைத்து செல்ல பட வில்லை என்றும் 9.8.2006 அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு அதாவது சம்பவம் நடந்து ஒரு நாளுக்கு பிறகு தான் அவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஆகவே, மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டப்பட்டவர், மரணமுற்றவரை கீழே தள்ளி, வயிற்றின் மீதேறி நின்ற

செயலானது மரணமடைந்தவர் மற்றும் குற்றச்சாட்டப்பட்டவரிடையே நடந்த சண்டைக்கு முன்னரே நடந்ததாக தெரிகிறது. பதிவு செய்யப்பட்ட சான்றுகள் மற்றும் அரசு தரப்பு வழக்கின்படியும் கூட மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டபட்டவர் இறப்பை விளைவிக்கும் எண்ணத்துடன் அந்த செயலை அவரது தரப்பில் செய்தார் எனவோ அல்லது இயல்பான போக்கில் இறப்பை விளைவிக்க கூடிய அத்தகைய உடற்காயத்தை மரணமடைந்தவருக்கு விளைவிக்கும் எண்ணத்துடன் அத்தகைய செயலை செய்தார் என கூற முடியாது. மேலும் இந்த வழக்கானது இ.த.ச., பிரிவு 300 கூறு 3–ன் கீழ் வரஇயலாது. இந்த வழக்கின் பொருண்மை மற்றும் சூழலின் அடிப்படையில் குற்றஞ்சாட்டபட்டவர் ஏதேனும் உள்நோக்கத்துடன் மரணமடைந்தவருக்கு உடற்காயத்தை விளைவிக்கும் பங்கினை செய்தார் எனவோ மற்றும் அத்தகைய உடற்காயம் இயல்பான போக்கில் இறப்பை விளைவிக்க போதுமானதாக இருக்கும் என அத்தகைய செயலை செய்தார் எனவும் கூற முடியாது. மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக முன்னிலையா ன கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்து நின்ற (மேற்படி) சஞ்சய் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவை பொறுத்தவரையில் , அதை கருத்தில் கொள்வதன் பேரில், அந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் தற்போதயை வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தாது என்பதே எங்கள் கருத்தாகும். அந்த வழக்கில், சம்பவம் நடந்து 62 நாட்கள் கழித்தே செப்டிசிமியா காரணத்தால் அவருக்கு மரணம் ஏற்பட்டது. இடையில் அவர் மருத்துவமனையில் இருந்து நல்ல நிலையில் வெளியேறினார் மற்றும் 62 நாட்கள் உயிருடன் இருந்தார். எனவே இறந்தவர் 62 நாட்கள் உயிர்பிழைத்திருந்தார் மற்றும் மருத்துவமனையில் இருந்து வெளியேறியபோது அவரது உடல்நிலை சீராக இருந்தது என்ற சங்கதியை கருத்தில் கொண்டு பார்க்கையில் , இ.த.ச.,பிரிவு 300 ஈர்ப்பதற்கு உட்கருத்துடன் ஏற்படுத்தப்பட்ட காயமானது இயல்பாகவே மரணத்தை விளைவிப்பதற்கு போதுமானது என்று நீதிமன்றம் அனுமானிக்க முடியாது

என்பதே இந்நீதிமன்றத்தின் கருத்தாகும் . அதன் பிறகு பொருண்மையின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இதச பிரிவு 302– ல் இருந்து 304(1)க்கு குற்றதண்டனையை மாற்றியமைத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்தது. இந்த தீர்ப்பின் முலமாக எங்கே ஒருவர் செப்டிசிமியாவால் மரணமுற்றாலும் அனைத்து வழக்கும் 304–ன் கீழ் வரும் என அறுதியிட்டு எந்த சட்ட முன்மொழிவையும் இந்த நீதிமன்றம் வகுத்துரைக்கவில்லை . இந்த வழக்கை பொருத்தமட்டில் மரணமுற்றவர் இறப்பு செப்டிசிமியாவால் நிகழ்ந்தாலும் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுகொண்டிருக்கும்போதே மரணமுற்றார் என்றும், அவர் சம்பவம் நடந்த தேதியில் இருந்து 3 நாட்களுக்குள்ளாகவே மரணமுற்றார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே பொருண்மையின் படி மேற்படி முன் தீர்வு இவ்வழக்கிற்கு பொருந்தாது. (பத்தி 8, 9)

3. ஆயினும், அதே சமயத்தில், மரணமுற்றவர் 24 மணி நேரத்திற்கு பின்னரே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதையும், அதன்பின்னர் 3 நாட்களுக்குள் செப்டிசிமியாவினால் அவர் இறந்ததையும் கருத்திற்கொள்ளவேண்டும். அவருக்கு உடனடியாக சிகிச்சை தரப்பட்டிருந்தால், விளைவு வேறு மாதிரியாக இருந்திருக்கலாம். எப்படியாயினும், இதில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் முன்திட்டமிடுதல் ஏதும் இல்லை ; குற்றஞ்சாட்டபட்டவர் எந்த ஆயுதத்தையும் வைத்திருக்கவில்லை; திடீரென்று ஏற்பட்ட சண்டையினால் மற்றும் குற்றஞ்சாட்டப் பட்டவர் மரணமுற்றவரை தள்ளி, அவரின் வயிற்றின் மீது ஏறி நின்றதால், மேற்சொன்னபடி இவ்வழக்கு இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300 விதிவிலக்கு 4– ன் கீழ் வருகிறது மற்றும் இது பிரிவு 300 கூறு 3–ன்றையோ (அ) பிரிவு 300 கூறு 4–ன்கையோ ஈர்க்காது என கருத்துரைக்கப்பட்டது. எனவே, இதில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, அதிகப்படியாக குற்றஞ்சாட்டப்பட்டவர்இந்திய தண்டனை சட்டம் பிரிவு304(1) – ன் கீழ் குற்றம்

புரிந்ததாக கூறலாம். மேற் சொன்னதை கருத்தில் கொண்டும் , மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காகவும், இந்த மேல்முறையீடு பகுதியாக வெற்றிகாண்கிறது. மேல்முறையீட்டா ளர்/குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச ., பிரிவு 302–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மற்றும் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு ஆகியவை, மேல்முறையீட்டாளர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் , இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304(1) –ன் கீழான குற்றத்திற்காக குற்றவாளி என மாற்றியமைத்துடன் அவர் ஏற்கனவே அனுபவித்துள்ள தண்டனை காலமான அதாவது 14.5 வருடங்களை விதித்து உத்தரவிட்டது. விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட எஞ்சியுள்ள , தீர்ப்புரை மற்றும் உத்தரவு ஆகியவை இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது . (பத்திகள் 10, 11)

சஞ்சய் – எதிர் – உத்திர பிரதேச மாநில அரசு (2016) 3 எஸ்.சி.சி 62 – பொருத்தமற்றது என முடிவு.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

(2016) 3 எஸ்.சி.சி 62 பொருத்தமற்றது என முடிவு பத்தி 10

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு, குற்றவியல் மேல்முறையீட்டு எண் 121/2021

பிலாஸ்புரில் உள்ள சதீஸ்கர் உயர்நீதிமன்றத்தால் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 38/2009 –ல் 27/1/2014 அன்று வழங்கபட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

<u>வழக்குரைஞர்கள்</u>

ரிஷி மல்ஹோத்ரா – மேல்முறையீட்டாளருக்காக

பிராச்சி மிஸ்ரா – கூடுதல் தலைமை வழக்கறிஞர்

அவருக்கு உதவியாக

சைதன்யா மற்றும் அஸ்வதி எம். கே – எதிர் மேல்முறையீட்டாளர்களுக்காக

தீர்ப்புரை

(இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா அவர்களால் பகரப்பட்டது)

1. இ.த.ச., பிரிவு 302–இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்/அசல் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானித்து, அவருக்கு ஆயுள் தண்டனையை விதித்து, கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை உறுதிசெய்து, மேல்முறையீட்டாளர்–அசல் குற்றஞ்சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மேல்முறையீட்டை தள்ளுபடி செய்த பிலாஸ்புரில் உள்ள சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தால் குற்றவியல் மேல்முறையீடு எண் 38/2009–இல், 27.1.2014 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் பாதிக்கப்பட்டு, மனக்குறையுற்ற மேல்முறையீட்டாளர் / அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர், இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

2. தொடக்கத்திலேயே, இ.த.ச., பிரிவு 304–1 –ன் கீழ் தண்டனை மாற்றி அமைக்கப்படவேண்டுமா? என்பதை குறித்து இந்த நீதிமன்றம் 8.1.2021 தேதி அன்று ஒரு வரையறுக்கப்பட்ட அறிவிப்பை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டபட்டவரின் தண்டனையானது இ.த.ச., பிரிவு 304 –1– ன் கீழ் மாற்றியமைக்கப்பட வேண்டுமா ? இல்லை? என்பதான கேள்வி தற்போதயை மேல்முறையீட்டிருக்கு உட்பட்டது .

3. மேற்படி பிரச்சனை /கேள்வியை தீர்மானிக்கையில் , அரசு தரப்பு வழக்கையும் , சம்பவம் நிகழ்ந்த முறையையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் . அரசு தரப்பு வழக்கு படி, 8.8.2006 அன்று மாலை சுமார் 6.30 மணி அளவில், மரணமுற்றவர் தனது அண்டை வீடான தேவன் என்பவர் வீட்டிலிருந்தார். அதே

நேரத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவர் பணம் குறித்து அவரிடம் உரையாடிக்கொண்டிருந்து, அவர் அவரிடம் சண்டையிட்டார் . குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரை கீழே தள்ளி , அவரின் வயிற்றின் மீது ஏறி நின்று நசுக்கினார்.மறுநாள், அதாவது 9.8.2006 அன்றுமாலை சுமார் 6.30 மணி அளவில் மங்குவின் சகோதரி மங்கியிடம் சன்னுராமின் மகன், மங்குவிற்கு அடிவயிற்றில் கடுமையான வலி இருப்பதாக தெரிவித்தார். மரணமுற்றவரின் சகோதரியான மங்கி, அவரது வீட்டிற்கு வந்து அவரை கண்டதன் பேரில், பச்சேரியில் உள்ள என்எம்டிசி அப்போலோ சென்ட்ரல் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவரை அனுமதித்தார். அன்றைய நாள் 9.8.2006 அன்று இரவிலேயே, அவர் ஜக்தால்புரில் உள்ள மகாராணி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். சிகிச்சையின் போதே மங்குராம்11.8.2006 அன்று மரணமடைந்தார். டாக்டர் திருமதி எஸ். குப்தா (அ.சா.3)–வின் பிரேத பரிசோதனை அறிக்கை படி, சிறுகுடலில் காயம் ஏற்பட்டதன் காரணமாக செப்டிசிமியா ஏற்பட்டு, அதன் விளைவாக ஏற்பட்ட அதிர்சியே மரணமடைந்த மங்குராமின் மரணத்திற்கு காரணம் எனக் கூறப்பட்டது.

4. மேற்சொன்ன சங்கதி மற்றும் சூழ்நிலைகளின் துணை கொண்டு பார்க்கையில் , குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ன மாதிரியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது . கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் , குற்றஞ்சாட்டப்பட்டவர் புரிந்த மங்குராமின் கொலை, இ.த.ச., பிரிவு 300 விதிவிலக்கு 4–ன் கீழ் வராது எனவும் , அவ்வழக்கு இ.த.ச., பிரிவு 300 கீழ் வரும் எனவும் கண்டறிந்து, கருத்துரைத்ததன் பேரில் குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச., பிரிவு302.ன் கீழ் தண்டனைக்குரிய குற்றவாளி என தீர்பளித்தது.அதன்படி, இ.த.ச., பிரிவு 302–ன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானித்த கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கியது.

உயர்நீதிமன்றம், அதன் எதிர்ப்புக்குள்ளன தீர்ப்புரை மற்றும் உத்தரவு முலம் அதனை உறுதி செய்தது.

5. குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் இந்த வழக்கின் சம்பவம் 8.8.2006–ல் நடைபெற்றது என கடுமையாக எடுத்துரைத்தார். மரணமடைந்தவருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் இடையே தீடீரென்று சண்டை ஏற்பட்டது மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மரணமடைந்தவரைப் பிடித்து தள்ளினார் மற்றும் அவரின் வயிற்றின் மீது அமர்ந்தார். குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மரணமடைந்தவரை கொலை செய்ய அவரது தரப்பில் எந்த உள்நோக்கமும் இல்லை என்று பணிந்துரைக்கப்பட்டது. இந்த சம்பவம் 8.8.2006 அன்று மாலை சுமார் 6.30 மணி அளவில் நடந்தபோதிலும் மரணமடைந்தவர் மறு நாள் 9.8.2006 அன்று அதாவது மாலை சுமார் 6.30 மணி அளவில் தான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று பணிந்துரைக்கப்பட்டது . அதன் பிறகு 2 நாட்கள் கழித்து தான் மரணமடைந்தவர் செப்டிசிமியாவின் ஏற்பட்ட தன் காரணமாக இறந்தார் என்று பணிந்துரைக்கப்பட்டது. ஆகவே, இந்த வழக்கு இ.த.ச .,பிரிவு 300–ல் விதிவிலக்கு 4–ன் கீழ் வரும் எனவும், அதனால் மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாடட்ப்பட்டவர் இ.த.ச ., பிரிவு 302 –ன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தை புரிந்தார் எனக் கூற முடியாது எனவும் கூறினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் இ.த.ச ., பிரிவு 304 –1 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக தான் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் பணிந்துரைக்கப்பட்டது, குற்றஞ்சாட்டப்பட்டவர் ஏற்கனவே 14.5 வருடம் சிறைதண்டனை அனுபவித்துள்ளார் எனவும் பணிந்துரைக்கப்பட்டது..

5.1. மேற்பாடி வாதத்தையும் , சஞ்சய் – எதிர் – உத்திர பிரதேச மாநில அரசு, (2016) 3 எஸ்சிசி 62 என்ற வழக்கின் வெளியிடப்பட்ட தீர்ப்புரையையும் சார்ந்து நின்று , மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனை

தீர்ப்பை இதச பிரிவு 302–ல் இருந்து இதச பிரிவு 304 – 1 கீழ் மாற்றி அமைக்கும்படி வேண்டுரைக்கப்பட்டது.

6. சத்தீஸ்கர் மாநில அரசு – எதிர் மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் இந்த மேல்முறையீட்டினை எதிர்த்துரைத்தார் .

இந்த வழக்கில் மரணமுற்றவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது , சம்பவம் நடந்த 3 நாட்களுக்குள் மரணமடைந்தார் என கடுமையாக பணிந்துரைக்கப்பட்டது . மருத்துவச் சான்றுப்படி, மரணமுற்றவர் சிறுகுடலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ஏற்பட்ட செப்டிசிமியா வினால் மரணமடைந்தார் என்பது உண்மையாக இருக்கலாம் என்றும் பணிந்துரைக்கப்பட்டது. இருந்த போதிலும் முதலில் மரணமுற்றவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரின் வாக்குமுலம் மற்றும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரின் வாக்குமுலம் ஆகியவற்றை முழுவதுமாக கருத்தில் கொள்ளவேண்டும் என பணிந்துரைக்கப்பட்டது. இந்த வழக்கில் மருத்துவர் திருமதி .ஜெ. குப்தா (அ.சா.3) கருத்துப்படி மரணமுற்றவருக்கு வயிற்றை நசுக்கியதன் விளைவாக காயம் ஏற்பட்டது என பணிந்துரைக்கப்பட்டது , எனவே குற்றம்சாட்டபட்டவரால் செய்யப்பட்ட மங்குராமின் கொலை இ.த.ச., பிரிவு 300 விதிவிலக்கு 4.ன் கீழ் வராது என கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் கரு த்துரைத்து, தீர்மானித்தது சரியே என்று பணிந்துரைக்கப்பட்டது.இந்த வழக்கு இ.த.ச., பிரிவு 300 கூறு 3/4–ன் கீழ் வரலாம் என பணிந்துரைக்கப்பட்டது எனவே, விசாரணை நீதிமன்றமும் , உயர்நீதிமன்றமும் இ.த.ச., பிரிவு 302.ன் கீழான குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானித்ததில் பிழை ஏதும் புரியவில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

6.1 – எனவே வழக்கின் பொருண்மை மற்றும் சூழலின் படி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் கற்றறிந்த வழத்குரைஞர் சார்ந்து நின்ற இந்த நீதிமன்றத்தின் (மேற்படி)சஞ்சய் என்ற வழக்கின் தீர்ப்புரை, இவ்வழக்கிற்கு

பொருந்தாது மற்றும் /அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அதிக அளவில் உதவாது எனவும் எடுத்துரைக்கப்பட்டது.

6.2 – மேற்படி வாதுரைகளுடன், தற்போதயை மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யும்படி வாதுரைக்கப்பட்டது .

7, நாங்கள் இருதரப்பினர்களின் கற்றறிந்த வழக்குரைஞர்களின் நீண்ட வாதத்தை கேட்டோம்.

இதில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு , இந்நீதிமன்றத்தின் முன்னே வைக்கப்பட்டுள்ள ஒரே கேள்வி யாதெனில் , இந்த வழக்கின் பொருண்மை மற்றும் சூழலின் படி, குற்றஞ்சாட்டப்பட்டவர் இ.த.ச., 300–ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு குற்றவாளி மரணமுற்றவரை கொலை செய்தார் என கூற முடியுமா ? ஆகவே இ.த.ச., பிரிவு 302–ன் கீழ் கீழமை நீதிமன்றங்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானித்தது சரியா? அல்லது இ.த.ச., பிரிவு304(1).ன் கீழ் குற்றத்தீர்ப்பு மாற்றியமைக்கப்படலாமா? என்பதாகும் ..

7.1 மேற்படி கேள்விக்கு பதில் அளிக்கையில் , எப்போது மரணம் விளைவிக்கும் குற்றம் கொலையாக கருதப்படும்? மற்றும் எப்போது மரணம் விளைவிக்கும் குற்றம் கொலையாக கருதப்படாது? என்பதை குறித்து இதச பிரிவு 300–ல் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு 300 கொலைக் குற்றம்

இதற்குப் பின் விலக்கப்பட்டுள்ள நேர்வுகளில் தவிர, எந்தச் செய்கை மரணத்தை விளைவிக்கிறதோ, அந்தச் செய்கை மரணத்தை விளைவிக்கும் உட்கருத்தோடு செய்யப்பட்டிருக்கிறதென்றால், அல்லது

இரண்டாவதாக – தீங்கு செய்யப்படுகிறவருக்கு மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று குற்றவாளியின் அறிவுக்கு படுகிற உடற்காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் அது செய்யப்படுகிறதென்றால், அல்லது

மூன்றாவதாக – எவருக்கேனும் உடற்காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் அது செய்யப்பட்டு, உண்டாக்கக் கருதிய அந்த உடற்காயமானது,

இயற்கையின் சாதாரணப் போக்கில் மரணத்தை உண்டாக்குவதற்கு போதுமானதாக இருக்கிறதென்றால், அல்லது

நான்காவதாக – அந்தச் செய்கையைச் செய்கின்றவர், அது, பெரும்பாலும் உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவே செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ மேற்சொன்னவாறான அத்தகைய காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமுமில்லாமல் அத்தகைய செய்கையைச் செய்வாரானால், மரணத்தை விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகும்.

மரணம் விளைவிக்கும் குற்றம், எப்பொழுது கொலைக் குற்றமாகாது.

விலக்கு 1 – குற்றவாளி கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டு, தம்மை அடக்கிக் கொள்ளும் சக்தியை இழந்த நிலையில், ஆத்திர மூட்டியவருடைய மரணத்தை விளைவித்தால், அல்லது வேறு எவருடைய மரணத்தைத் தவறுதலாக அல்லது தற்செயலாக விளைவித்தால், மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது.

மேற்கண்ட விலக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும் –

முதலாவதாக – ஆத்திரமூட்டப்படுதலானது, எவர் ஒருவரையும் கொலை செய்வதற்கு அல்லது அவருக்குத் தீங்கிழைப்பதற்குச் சாக்காக, குற்றவாளியால் நாடப்பட்டதாகவோ அல்லது தன்னிச்சையாகத் தூண்டப்பட்டதாகவோ இருத்தலாகாது.

இரண்டாவதாக – அத்தகைய ஆத்திரமூட்டுதலானது, சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து செய்யப்பட்ட எதனாலேனும், அல்லது ஒரு பொது ஊழியர் அத்தகைய பொது ஊழியர் என்ற முறையில் சட்டப்படி செலுத்திய அதிகாரங்கள் எவற்றினாலேனும், ஏற்பட்டிருந்தலாகாது.

மூன்றாவதாக – ஆத்திரமூட்டுதலானது, தற்காப்புரிமையைச் சட்டப்படி பயன்படுத்தும்போது, செய்யப்பட்ட எதனாலேனும் ஏற்பட்டிருத்தலாகாது.

விளக்கம் – அத்தகைய ஆத்திரமூட்டுதலானது, அக்குற்றத்தைக் கொலைக் குற்றமாகாமல் தடுக்கப் போதுமான அளவு கடுமையானதாகவும், திடீரென ஏற்பட்டதாகவும், இருந்ததா என்பது சங்கதி பற்றிய பிரச்சினையாகும்.

விலக்கு 2 – நல்லெண்ணத்தில், உடலில் அல்லது சொத்தின் தற்காப்புரிமையைப் பயன்படுத்துவதில், சட்டம் அவருக்குக் கொடுத்துள்ள அதிகாரத்தையும் மிஞ்சி, எவருக்கெதிராக அத்தகைய தற்காப்புரிமையைப் பயன்படுத்துகிறாரோ அவருடைய மரணத்தை முன் ஆலோசனையில்லாமலும், அத்தகைய தற்காப்பின் பொருட்டு தேவையானதற்கும் அதிகமான தீங்கை விளைவிக்கும் உட்கருத்தில்லாமலும், குற்றவாளி மரணத்தை விளைவிப்பாரானால், மரணம் விளைவிக்கும் குற்றம், கொலைக் குற்றமாகாது.

விலக்கு 3 – குற்றவாளி, பொது ஊழியராக இருந்து, அல்லது பொது நீதியின் மேம்பாட்டுக்காகச் செயற்படுகின்ற பொது ஊழியருக்கு உதவி புரிபவராக இருந்து, சட்டம் தமக்களித்திருக்கும் அதிகாரத்தை மிஞ்சுவதோடு, தம் கடமையை அத்தகைய பொது ஊழியர் என்ற முறையில் உரிய வகையில் நிறைவேற்றுவதற்குச் சட்டபூர்வமானதென்றும் அவசியமானதென்றும் நல்லெண்ணத்துடன் தாம் நம்புகிற ஒரு செய்கையைச் செய்து, மரணம் விளைவிக்கப்பட்டவரின் மீது வெறுப்பில்லாமல் அந்தச் செய்கையின் மூலம் மரணம் விளைவித்தால், மரணம் விளைவிக்கும் குற்றமானது கொலைக் குற்றமாகாது.

விலக்கு 4 குற்றவாளி தகாத முறையில் தமக்கு அனுகூலம் தேடிக் கொள்ளும் வகையில் இல்லாமலோ, அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்து கொள்ளாமலோ, திடீர்த் தகராறில் உண்டான உணர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட திடீர்ச் சண்டையில் மரணம் விளைவிக்கும் குற்றம் முன் ஆலோசனையின்றிச் செய்யப்பட்டால், அது கொலைக் குற்றமாகாது.

விளக்கம் – இத்தகைய சந்தர்ப்பங்களில் எந்தத் தரப்பினர் ஆத்திரமூட்ட முனைகிறார் அல்லது முதல் தாக்குதலைச் செய்கிறார் என்பது பொருட்டன்று.

விலக்கு 5 – மரணம் விளைவிக்கப்பட்டவர் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராயிருந்து, தம் சம்மதத்தின் பேரில் சாவுக்கு உட்படுத்திக் கொள்கிறபோதோ அல்லது இறக்கும் அபாயத்தை மேற்கொள்ளுகிறபோதோ, மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 300, இரண்டு பகுதிகளைக் கொண்டது, முதல் பகுதியில் எப்போது மரணம் விளைவிக்கும் குற்றம் கொலையாக கருதப்படும் மற்றும் இரண்டாம் பகுதி விதிவிலக்கில் எப்போது மரணம் விளைவிக்கும் குற்றம் கொலையாக கருதமுடியாது எனவும் கூறப்பட்டுள்ளது, எங்கள் நோக்கத்தில் இந்த வழக்கிற்கு தொடர்புடைய பகுதியானது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300–ல் கூறு 4 மற்றும் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300–ல் விதிவிலக்கு 4–ம் ஆகும், இந்கிய தண்டனை சட்டம் பிரிவு 300–ல் கூறு 4–இல் இருந்து பிரிவு 300 வரை குறிப்பிடப்பட்டுள்ளபடி , அந்தச் செய்கையைச் செய்கின்றவர், அது, பெரும்பாலும் உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவே செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ மேற்சொன்னவாறான அத்தகைய காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமுமில்லாமல் அத்தகைய செய்கையைச் செய்வாரானால், மரணத்தை விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகும். எனினும், குற்றவாளி தகாத முறையில் தமக்கு அனுகூலம் தேடிக் கொள்ளும் வகையில் இல்லாமலோ, அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்து கொள்ளாமலோ, திடீர்த் தகராறில் உண்டான உணர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட திடீர்ச் சண்டையில் மரணம் விளைவிக்கும் குற்றம் முன் ஆலோசனையின்றிச் செய்யப்பட்டால், அது கொலைக் குற்றமாகாது.

இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300 –ல் விதிவிலக்கு– 4–ல் உள்ள விளக்கத்தின் படி அத்தகைய நேர்வில் எந்த தரப்பினர் சினமுட்டலைச் செய்கிறார் என்பது பொருட்டல்ல அல்லது முதலில் யார் தாக்குதலை நடத்துகிறார் என்பது பொருட்டல்ல.

8. தற்போதய வழக்கின் பொருண்மைக்கு வருவோம், அரசு தரப்பு வழக்கின் படி கூட, 8.8.2006 அன்று மாலை சுமார் 6.30 மணி அளவில் மரணமுற்றவர் தனது அண்டை வீட்டில் இருந்தபோது, அதே சமயத்தில் , குற்றஞ்சாட்ட ப்பட்டவர் பணம் குறித்து மரணமுற்றவருடன் உரையாடிக்கொண்டிருந்தார். பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவர் அவருடன் சண்டையிட்டார். அரசு தரப்பு வழக்கின் படி, குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரை கீழே தள்ளி மற்றும் அவரின் வயிற்றின் மீதேறி நின்றதன் விளைவாக உள் காயம் ஏற்பட்டது.

இந்நிலையில் , மறுநாள் வரைக்கும் அதாவது 9.8.2006 அன்று வரை மரணமுற்றவரை மருத்துவமனைக்கு கூட அழைத்து செல்ல பட வில்லை என்றும் 9.8.2006 அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு அதாவது சம்பவம் நடந்து ஒரு நாளுக்கு பிறகு தான் அவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஆகவே, மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டப்பட்டவர், மரணமுற்றவரை கீழே தள்ளி, வயிற்றின் மீதேறி நின்ற செயலானது மரணமடைந்தவர் மற்றும் குற்றச்சாட்டப்பட்டவரிடையே நடந்த சண்டைக்கு முன்னரே நடந்ததாக தெரிகிறது. பதிவு செய்யப்பட்ட சான்றுகள் மற்றும் அரசு தரப்பு வழக்கின்படியும் கூட மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டபட்டவர் இறப்பை விளைவிக்கும் எண்ணத்துடன் அந்த செயலை அவரது தரப்பில் செய்தார் எனவோ அல்லது இயல்பான போக்கில் இறப்பை விளைவிக்க கூடிய அத்தகைய உடற்காயத்தை மரணமடைந்தவருக்கு விளைவிக்கும் எண்ணத்துடன் அத்தகைய செயலை செய்தார் என கூற முடியாது. மேலும் இந்த வழக்கானது இ.த.ச., பிரிவு 300 கூறு 3–ன் கீழ் வரஇயலாது. இந்த வழக்கின் பொருண்மை மற்றும் சூழலின் அடிப்படையில் குற்றஞ்சாட்டபட்டவர் ஏதேனும் உள்நோக்கத்துடன்

மரணமடைந்தவருக்கு உடற்காயத்தை விளைவிக்கும் பங்கினை செய்தார் எனவோ மற்றும் அத்தகைய உடற்காயம் இயல்பான போக்கில் இறப்பை விளைவிக்க போதுமானதாக இருக்கும் என அத்தகைய செயலை செய்தார் எனவும் கூற முடியாது.

9. குற்றஞ்சாட்டப்பட்டவர் முன் திட்டமிட்டு செய்த செயல் என்பதற்கு எந்த சான்றுகளும் இல்லை. அரசு தரப்பு வழக்கை அப்படியே கருத்தில் கொண்டும் மற்றும் முன்னரே கவனித்தது போல, திடீரென்று பணம் குறித்த சண்டை எழுந்தது மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மரணமுற்றவரை கீழே தள்ளி மற்றும் திடீர் சண்டையின் போது ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் அவர் வயிற்றின் மீது ஏறி நின்றார். ஆகவே இந்த வழக்கு இதச பிரிவு 300 விதிவிலக்கு 4–ன் கீழ் வருகிறது. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300 –ல் விதிவிலக்கு– 4–ல் உள்ள விளக்கத்தின் படி அத்தகைய நேர்வில் எந்த தரப்பினர் சினமுட்டலைச் செய்கிறார் அல்லது முதலில் தாக்குதலை செய்கிறார் என்பது பொருட்டல்ல. கீழமை நீதிமன்றங்கள் தவறாக பொருள் கொண்டு மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டபட்டவரை இந்திய தண்டனை சட்டம் பிரிவு 302 –ன் கீழ் தண்டனைக்குரிய குற்றவாளியாக தீர்பளித்தது தவறு, மிக அதிகமாக மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டபட்டவரை இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304–1 ன் கீழ் குற்றம் இழைத்ததாக கூறலாம்,

10. மேல்முறையீட்டாளர் / குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்து நின்ற (மேற்படி) சஞ்சய் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவை பொறுத்தவரையில், அதை கருத்தில் கொள்வதன் பேரில், அந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் தற்போதயை வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தாது என்பதே எங்கள் கருத்தாகும். அந்த வழக்கில், சம்பவம் நடந்து 62 நாட்கள் கழித்தே செப்டிசிமியா காரணத்தால் அவருக்கு மரணம் ஏற்பட்டது. இடையில் அவர் மருத்துவமனையில் இருந்து நல்ல நிலையில் வெளியேறினார் மற்றும் 62 நாட்கள் உயிருடன்

இருந்தார். எனவே இறந்தவர் 62 நாட்கள் உயிர்பிழைத்திருந்தார் மற்றும் மருத்துவமனையில் இருந்து வெளியேறியபோது அவரது உடல்நிலை சீராக இருந்தது என்ற சங்கதியை கருத்தில் கொண்டு பார்க்கையில் , இ.த.ச.,பிரிவு 300 ஈர்ப்பதற்கு உட்கருத்துடன் ஏற்படுத்தப்பட்ட காயமானது இயல்பாகவே மரணத்தை விளைவிப்பதற்கு போதுமானது என்று நீதிமன்றம் அனுமானிக்க முடியாது என்பதே இந்நீதிமன்றத்தின் கருத்தாகும். அதன் பிறகு பொருண்மையின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இதச பிரிவு 302– ல் இருந்து 304(1)க்கு குற்றதண்டனையை மாற்றியமைத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்தது. இந்த தீர்ப்பின் முலமாக எங்கே ஒருவர் செப்டிசிமியாவால் மரணமுற்றாலும் அனைத்து வழக்கும் 304–ன் கீழ் வரும் என அறுதியிட்டு எந்த சட்ட முன்மொழிவையும் இந்த நீதிமன்றம் வகுத்துரைக்கவில்லை. இந்த வழக்கை பொருத்தமட்டில் மரணமுற்றவர் இறப்பு செப்டிசிமியாவால் நிகழ்ந்தாலும் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுகொண்டிருக்கும்போதே மரணமுற்றார் என்றும், அவர் சம்பவம் நடந்த தேதியில் இருந்து 3 நாட்களுக்குள்ளாகவே மரணமுற்றார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே பொருண்மையின் படி மேற்படி முன் தீர்வு இவ்வழக்கிற்கு பொருந்தாது.

ஆயினும், அதே சமயத்தில், மரணமுற்றவர் 24 மணி நேரத்திற்கு பின்னரே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதையும், அதன்பின்னர் 3 நாட்களுக்குள் செப்டிசிமியாவினால் அவர் இறந்ததையும் கருத்திற்கொள்ளவேண்டும். அவருக்கு உடனடியாக சிகிச்சை தரப்பட்டிருந்தால், விளைவு வேறு மாதிரியாக இருந்திருக்கலாம். எப்படியாயினும், இதில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் முன்திட்டமிடுதல் ஏதும் இல்லை ;

குற்றஞ்சாட்டபட்டவர் எந்த ஆயுதத்தையும் வைத்திருக்கவில்லை,; திடீரென்று ஏற்பட்ட சண்டையினால் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மரணமுற்றவரை தள்ளி, அவரின் வயிற்றின் மீது ஏறி நின்றதால்,

மேற்சொன்னபடி இவ்வழக்கு இந்திய தண்டனை சட்டம் பிரிவு 300 விதிவிலக்கு 4– ன் கீழ் வருகிறது மற்றும் இது பிரிவு 300 கூறு 3–ன்றையோ (அ) பிரிவு 300 கூறு 4–ன்கையோ ஈர்க்காது என கருத்துரைக்கப்பட்டது. எனவே, இதில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, அதிகப்படியாக குற்றஞ்சாட்டப்பட்டவர்இந்திய தண்டனை சட்டம் பிரிவு304(1) – ன் கீழ் குற்றம் புரிந்ததாக கூறலாம்.

11, மேற் சொன்னதை கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காகவும், இந்த மேல்முறையீடு பகுதியாக வெற்றிகாண்கிறது. மேல்முறையீட்டா ளர்/குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச., பிரிவு 302–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மற்றும் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு ஆகியவை, மேல்முறையீட்டாளர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் , இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304(1) –ன் கீழான குற்றத்திற்காக குற்றவாளி என மாற்றியமைத்துடன் அவர் ஏற்கனவே அனுபவித்துள்ள தண்டனை காலமான அதாவது 14.5 வருடங்களை விதித்து உத்தரவிட்டது. விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட எஞ்சியுள்ள , தீர்ப்புரை மற்றும் உத்தரவு ஆகியவை இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது .

12, மேல்முறையீட்டாளர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் வேறு ஏதேனும் வழக்கிற்கு தேவைபடாவிடில், அவர் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."